தலைவர் அறிய விரும்பினார். சாலைகளை அகலப்படுத்த ஏராளமான செலவு ஆகும் என்பதற்காக, திருப்பூர் நகரமன்றம் மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்று துணை நகரமைப்புத் தலைவர் கூறியுள்ளார். அவர்களுடைய பொருளாதார நிலையைப் பொறுத்து இந்தத் திட்டத்தின் பெரும் பகுதி நிறைவேற்றப்படும். திட்ட நாளாகிய 19—8—1947-லிருந்து இருபதாண்டுக் கால அளவு 19—8—1967 அன்றுடன் முடிவடைந்தது. எனவே, இக்கால அளவை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் என்று திருப்பூர் நகராட்சி மன்றம் கேட்டுக்கொண்டது. அதற்கேற்ப, பணிகளை முடிப்பதற்கான கால அளவு 1967-லிருந்து மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆகையால் இத் திட்டமானது 19—8—1972-க்குள் முழுவதுமாக நிறைவேற்றப் படவேண்டுமென்று அரசாங்கம் விரும்புகிறது.

Electrical crematorium for Madras.

449 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to stote—

(a) whether there is any proposal under the consideration of the Government to put up electrical crematorium in Madras City: and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, சென்னையிலே மக்கள் பெருக்கம் அதிகமாகி விட்டது. மக்கள் உற்பத்தி ஆகிற வேகத்தைப் பார்த்தால் இன்னும் சில நாட்களில் செல்கிற பிணங்கள் க்யூ வரிசையில் நிற்க வேண்டிவரும். அதை ஒட்டி, மின்சாரப் பொறி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அதைப் பற்றி நான் அறிந்த வரையில் பிணங்கள் க்யூ வரிசையில் இருக்கும் போது தான் அந்த மின்சார அடுப்பு முழு அளவில் பயன்படும். இல்லையென்றால் மின்சார அடுப்பு முழு சூடு அடைய ஏறத்தாழ சுவிட்சு போட்டதிலிருந்து 6 மணி நேரம் ஆகவேண்டும். அதை அவ்வப்போது அணைக்க இடம் இருக்கக் கூடாது. அவ்வளவு பிணங்கள் இன்று ஒரே இடத்தில் எரிக்கப்படுவது இல்லை. அவ்வளவு பிணங்கள் ஒரே இடத்தில் எரிக்கக்கூடிய சூழ்நிலை, மனப்பான்மை வருகிறபோது இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, நம் நாட்டின் ஹிந்துக்கள் செத்த பிறகு எலும்புகளை காசி, இராமேஸ்வரத்தில் கொட்டுகிறார்கள். இந்த மின்சார எரிப்பு முறை வந்தால் எலும்புகள் கிடைக்காது என்ற காரணத்தால் இதைப் பலர் எதிர்ப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதை மக்களுக்கு விளக்குகிற வகையில் அரசாங்கம் அதன் பயன் குறித்து பிரசாரம் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மின்சார அடுப்பு உருவாக்கப்படுகிற காலத்தில் பொதுமக்கள் அதனுடைய பயனை உணர்ந்து விடுவார்கள் என்று நான் நம்பிக்கொண்டு இருக்கிறேன் . இன்னும் சில ஆண்டுகள் போனால் மத மூட நம்பிக்கைகள் மெல்ல மெல்ல ஒழியும் போது, எரிக்கப்படுகிற உடம்பின் எலும்பு தேவை இல்லை என்று எண்ணுகிற நிலைமை வரும். சிலர் மத அடிப்படையில் வேண்டாம் என்று சொன்னாலும், பெரும் பாலான சாதாரண மக்கள் அதன் பயனை உணர்ந்து அதை எதிர்க்க மாட்டார்கள். எனவே, நாடு வளர்ச்சி பெறும்போது அதைப்பற்றிய திட்டத்தையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, சென்னையில் மாம்பலத்திற்குப் பக்கத்தில் கண்ணம்மாபேட்டை அருகே ஒரு கட்டிடம் கட்டி மின்சாரப் பொறி பொருத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே மக்கள் பிணத்தைக் கொளுத்துகிறார்கள். அங்கே மின்சார இணைப்புக் கொடுத்து கொளுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இது தனிக் கேள்விக்கு உரியது மட்டுமல்ல, கேள்வி போட வேண்டிய இடமும் வேறு.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இன்று சென்னை போன்ற பெரிய நகரங்களில் பிணங்களைப் பலர் புதைத்து வருகிறார் கள். இந்தப் பிணத்தைப் புதைப்பதற்கு பல இடங்களில் இடுகாடு கள் இருக்கின்றன. இந்த இடுகாடுகளில் வீடு கட்டிவிடுகிறார்கள். குடிசைப்போட்டு விடுகிறார்கள் என்று புகார் வருகிறது. இவற்றைத் தடுப்பதற்காக பிணங்களை எரிக்க மின்சாரப் பொறி ஏற்படுத்தி எல்லாவற்றையும் ஒரே இடத்தில் கொண்டு வந்து எரிப்பதற்கான வசதி செய்து தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் கூட மாநகராட்சி மன்றத்தின் கருத்தையும், பொருளா தாரத்தையும் பொருத்ததாகும்.

Mini Primary Health Centres.

* 450 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to open a number of Mini Primary Health Centres in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

@ 628-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.